பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10–11–2010) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11–41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி1) துறையின் 2–3–2010 ஆம் நாளிட்ட 23 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

2. (i) யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு குறைத்தது குறித்தும்; (ii) தமிழ்நாடு அரசிதழின் பாகம் II–ல் வெளியிடப்பட்ட 21–5–2008 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/வ.வ.ப./19/2008 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்தும்; (iii) தமிழ்நாடு அரசிதழின் பாகம் II–ல் வெளியிடப்பட்ட 10-6-2009 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/வ.வ.ப./14/2009 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்தும்; (iv) யாதொரு வணிகர், சோம்புப் பொடி, மிளகுப் பொடி மற்றும் சீரகப் பொடி தயாரிப்பில் பயன்படுத்துவதற்கான மூலப்பொருட்களின் கொள்முதல்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (v) யாதொரு வணிகர், ஒரு ஆண்டின் மொத்த விற்பனைத் தொகை ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவாக விற்பனை செய்யும் சோற்றுக் கற்றாழையைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பொருட்களின் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (vi) வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சர்க்கரையின் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (vii) யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க விற்பனை வரியை விலக்களித்தது குறித்தும்; மற்றும் (viii) யாதொரு

2010 நவம்பர் 9]

வணிகர், பாலியஸ்டர் பிலிம் நூல் மற்றும் ரேடியண்ட் நூல் நீங்கலாக ஜரிகை விற்பனை அல்லது கொள்முதல்மீது செலுத்தத்தக்க வரியை விலக்களித்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 29–3–2010 ஆம் நாளிட்ட 33 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

3. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (மொத்த விற்பனையில் வழங்கல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 27–3–2010 ஆம் நாளிட்ட 15 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

4. (i) தமிழ்நாடு அரசு வாணிபக் கழகம் கொள்முதல் செய்யும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளின் விற்பனைமீது சில்லறை மதுபான கடை உரிமையாளர்கள் செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்தும்; (ii) பாலிதீன் வண்ண சிறுமணிகள்மீது செலுத்தத்தக்க வரி வேறுபாட்டுத் தொகை, மேல்வரி, கூடுதல் மேல்வரி மற்றும் தண்டத் தொகை ஆகியவற்றை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள காலங்களுக்கு தள்ளுபடி செய்தது குறித்தும்; (iii) சாராய விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வேறுபாட்டுத் தொகை மற்றும் அதற்குரிய மேல்வரித் தொகை ஆகியவற்றை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்தும்; (iv) இந்திய உணவுக் கழகத்தால் விற்பனை செய்யப்பட்ட உரங்கள்மீது செலுத்த வேண்டிய வரித் தொகை மற்றும் மேல் வரி ஆகியவற்றை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்தும் மற்றும் (v) சென்னை, திருவாளர் பிலால் உசேன் & கம்பெனி REP Licence விற்பனைமீது செலுத்தத்தக்க தண்டத் தொகையை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவுத் (டி2) துறையின் 16–11–2009 ஆம் நாளிட்ட 236 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[2010 நவம்பர் 9

5. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி1) துறையின் 19–4–2010 ஆம் நாளிட்ட 50 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

6. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் பார்களில்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (6) துறையின் 29–3–2010 ஆம் நாளிட்ட 17 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

7. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி1) துறையின் 6–4–2010 ஆம் நாளிட்ட 42 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

8. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி1) துறையின் 6–5–2010 ஆம் நாளிட்ட 62 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

9. யாதொரு வணிகர், திருநெல்வேலி மாவட்டம், பத்தமடை என்ற முகவரியிலுள்ள திருவாளர்கள் சுவாமி சிவானந்தா நூற்றாண்டு விழா மருத்துவமனை நிறுவனத்திற்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்த வேண்டிய வரியைத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 4–5–2010 ஆம் நாளிட்ட 58 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2010 நவம்பர் 9]

10. தமிழ்நாடு அரசால் எற்படுத்தப்பட்ட அமைப்புகளான தமிழ்நாடு மாநில விழிப்புப்பணி ஆணையம் மற்றும் விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககம் ஆகியவற்றிற்கு 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் (மத்தியச் சட்டம் 22/2005) பொருந்தாது என குறிப்பிட்டது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (என்) துறையின் 26–8–2008 ஆம் நாளிட்ட 158 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் (மத்திய சட்டம் 22/2005) 24 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

11. யாதொரு வணிகர், சொந்த தொழிலகப் பயனுக்காக மின் உற்பத்தி சாதனங்கள்மூலம் மின்சக்தி தயாரிப்பில் பயன்படுத்துவதற்காக தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்த தொழிலக நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுகிற உலை எண்ணெய் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 3–5–2010 ஆம் நாளிட்ட 56 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

12. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (மொத்த விற்பனையில் வழங்கல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 17–7–2010 ஆம் நாளிட்ட 31 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

13. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 29–3–2010 ஆம் நாளிட்ட 16 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937] 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

14. தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறையின் 13–4–2010 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 119–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு உலகத் தமிழ்ச்

செம்மொழி மாநாடு நடத்துவதற்கான ஆய்வரங்க மேம்பாட்டுப் பணிகள் மற்றும் சிறு அரங்கங்கள் அமைக்கும் பணிகளை கொடிசியா இன்டெக் டெக்னாலஜி, கோயம்புத்தூர் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுவதை அறிவிக்கையிட்டது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 30–4–2010 ஆம் நாளிட்ட 125 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

15. புவியியல் தகவல் முறையைப் (GIS) பயன்படுத்தி மாமல்லபுரம் உள்ளூர்த் திட்டப்பகுதி, அரியலூர் உள்ளூர்த் திட்டப்பகுதி மற்றும் ஸ்ரீபெரும்புதூர் புதிய நகர் மேம்பாட்டுத் திட்டப்பகுதி ஆகியவற்றிற்கான மூன்று பெருந்திட்டங்களை தயாரிக்கும் பணியினை சென்னை அண்ணா பல்கலைகழகத்தின் தொடர்பில்லா புலன் நிலையத்திடம் (Institute of Remote Sensing) ஒப்படைக்கப்படுவது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 28–7–2010 ஆம் நாளிட்ட 220 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

16. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொது விநியோகத் திட்டத்திற்காக ஆந்திர நுகர்பொருள் கழகத்திடமிருந்து இரண்டு இலட்சம் டன்கள் சன்னரக புழுங்கல் அரிசியினைக் கொள்முதல் செய்ய அறிவிக்கப்பட்டது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 28–7–2010 ஆம் நாளிட்ட 221 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

17. குடியாத்தம் நகர் மன்றத் தலைவரை நகர் மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கியது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறையின் 10–12–2009 ஆம் நாளிட்ட 528 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2010 நவம்பர் 9]

18. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கான (முன்னாள் உறுப்பினர்களுக்கான மருத்துவ கவனிப்பு மற்றும் சிகிச்சை) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பொது (நிர்வாகம்–1 மற்றும் சட்டமன்றம்) துறையின் 2–8–2010 ஆம் நாளிட்ட 702 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XX/1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS